30th March 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Wenlock Downs Advisory Committee is constituted for a period of one year at a time. As at present constituted, it consists of three official and nine non-official members. The functions of the Committee are briefly given below :—

(i) to control the fishing, shooting, riding, etc., in the area;

(ii) to maintain the scenic beauty of the Wenlock Downs;

(iii) to advise the Chief Conservator of Forests, as regards the maintenance of the Downs.

SRI N. K. PALANISAMI : வென்லாக் டவுன்ஸை அபிவிருத்தி செய்வதற்கு கமிட்டி ஏற்படுத்தி கிட்டத்தட்ட 4, 5 வருஷங்களுக்கு மேலாயிற்று. இதுவரையில் அது போதுமான அளவுக்கு அபிவிருத்தி செய்யப்படவில்லை. அதை அபிவிருத்தி செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு சர்க்காருக்கு ஏதாவது உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வென்லாக் டவுன்ஸ் சிறந்த இயற்கை வசதிகளை அளிக்கிறது. அதைவிட அபிவிருத்தி செய்வதற்கு ஒன்றுமில்லை. அந்த இயற்கை அழகை பாதுகாப்பது இப்பொழுது கவனிக்கப்படவேண்டிய விஷயம்.

SRI J. MATHA GOWDER : வென்லாக் டவுன்ஸ் கமிட்டியிலே அந்த ஜில்லா எம்.எல்.ஏ.-க்களை அங்கத்தினர்களாக போடவில்லையா ? அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த வென்லாக் டவுன்ஸ் கமிட்டியைப் பொறுத்தவரையில் எம்.எல்.ஏ.-க்களை போடவேண்டுமென்று கருதவில்லை. ஆனால் எம்.எல்.ஏ.-க்களும் இதில் சேர்க்கப்படலாம். அப்போதைக்கப்போது கமிட்டி திருத்தி அமைக்கப்படுகிறது.

Medicinal plants

* 1059 *Q.*—SRI R. SRINIVASA IYER: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any Research Station in the State for cultivation of medicinal plants and where;

(*b*) if so, the names of the plants grown there;

(*c*) the medicines prepared out of the above plants;

(*d*) the amount of grant received from the Central Government for this purpose;

(*e*) the amount spent or granted by the State Government for this purpose; and

(*f*) what steps have been taken by this Government to implement the recommendations of the Joint Meeting of the Medicinal Plants Committee of the Indian Council of Agricultural Research, the Pharmaceutical and Drugs Committee of the Council of Scientific and Industrial Research and the Pharmacology Committee of the Indian Council of Medical Research held in February 1956 regarding cultivation of medicinal plants on scientific lines and on a large scale?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The answer is in the negative.

[30th March 1959

(*b*) *to* (*e*) Do not arise.

(*f*) The recommendations of the various Committees on the cultivation of medicinal plants are being implemented to the extent possible by the Cinchona and Forest Departments of this State. The Government have sanctioned a Scheme for setting up Research Stations in the Government Cinchona Plantations for the cultivation and development of medicinal plants with financial aid from the Indian Council of Agricultural Research. Pending appointment of the technical staff for this new scheme regular work on the scheme has not yet been started.

SRI R. SRINIVASA IYER : Since the cultivation of medicinal plants on scientific lines on a large-scale has been advised, will the Government consider the feasibility of growing such plants in Reserve Forest areas in the higher level tracts of the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : We will first do this experiment in certain selected forest areas also in cinchona areas. After that we will consider extending to other areas.

SRI V. SANKARAN : பழனியில் மூலிகை ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படுவதுபற்றி ஆலோசிக்கப்பட்டதா ? அது இப்பொழுது கைவிடப்பட்டதா அல்லது இன்னும் ஆலோசனையில் இருக்கின்றதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : என்னிடம் தகவல் ஒன்றும் இல்லை.

SRI A. VEDARATHNAM : பைரத்ரம் இப்பொழுது தேவைக் குறைந்து அது சாகுபடி நடந்த இடங்களெல்லாம் குறைத்து வருவதாக கூறப்பட்டதே ? அந்த இடங்களில் மூலிகைகள் பயிற் செய்வதற்கு முயற்சிக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பைரத்ரம் சாகுபடி செய்யப்பட்ட இடங்களிலெல்லாம் மூலிகைகள் சாகுபடி செய்ய முடியும் என்று சொல்லுவதற்கு இல்லை. வேறு குறிப்பிட்ட சில தகுதியுள்ள பிராந்தியங்களில் பலவிதமான மூலிகைகள், 10, 15 விதமான மூலிகைகள் இப்பொழுது பயிர் செய்யப்பட்டு வருகிறது.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : விவசாயப் பண்ணைகளிலும், " ஸீட் பாரம் " போன்ற இடங்களிலும் இவ்வைத்திய மூலிகைகள் பயிரிடுவதற்காக ஒரு பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மூலிகைகள் பயிரிடுவதற்கு தண்ணீர் வேண்டும், மழை வேண்டும், சீதோஷ்ணஸ்திதியும் பார்க்க வேண்டும். அதையெல்லாம் பார்த்துத்தான் தகுந்த இடங்களில் பயிரிடப்படும்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : கம்பளிகோவிலில் கோவில் மேற்பார்வையில் ஆயுர்வேதிக் மருந்துசாலையும், ரிஸர்ச்சு சாலையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அப்படியுள்ள இடங்களுக்கெல்லாம், சர்க்கார் ஏதாவது உதவித் தொகை கொடுத்து, அந்த ஆராய்ச்சியை பலப்படுத்துவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சித்த வைத்திய முறைப்படி கம்பளிகோவில் தேவஸ்தானத்தில் ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. அங்கே சில மூலிகைகள் பயிரிட்டுக் கொண்டு வருகிறார்கள். அதற்கு அரசாங்கத்தின் உதவி தேவையில்லை.